# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ ஆனி 1979 ★ இதழ் - 42


## மழை நீரும் குளங்களும்

இற்றைக்கு ஒரு தலைமுறைக் காலத்துக்கு முன், "கச்சேரி பத்திரம், கச்சேரி பத்திரம்" என்று ஓயாமற் கூறிக்கொண்டு பைத்தியக்காரன் ஒருவன் திரிந்ததைப் பெரியவர்கள் முதியவர்கள் பட்டினத்துவாசிகள் அறிவர். நாங்களும் நாடறியப் பல வருடங்களாகக் குளத்தைத் தோண்டுவோம் மழைநீரைத் தேக்குவோம், என்று எழுதியும் பேசியும் வருகிறோம்.

மழைநீரை வளவுகளில் தேக்காமல் விட்டதால் உண்டான எதிர்ப் பலனைப் பல நண்பர்கள் எமக்கு எழுதியும் நேரில் வந்து விளக்கியும் அறிவிக்கிறார்கள். பொறியியலாளர் ஒருவர் தமது வளவில் ஆயிரக் கணக்காகக் காய்த்த மாமரம் இருநூற்றைம்பது வரையில் காய்க்கிறது என்கிறார், குலை குலையாய்ப் பெரிய தேங்காய்கள் தந்த தென்னைகள் சோடைபோய்ச் சிறியனவான குறைந்த காய்களைத் தருகின்றன என்கிறார்.

இவற்றுக்குத் தாமே காரணம் என்றும் தாம் சில வருடங்களாக மழைத் தண்ணீரை வளவில் தேக்காது விட்டகுறையை கண் கலங்கியவாறு விளக்கினார். யாழ்ப்பாணத்துக் கொட்டடி என்னும் ஊரிலுள்ள விவேகியான ஒருவர் தமது வளவிலுள்ள உவர் நீர்க் கிணற்றில் அமுதம் போன்ற நீர் சுரக்கிறது என்றார். ஏன் எப்படி என்று கேட்குமுன் அவர் தாம் மழைநீரை வளவில் தேக்கி விட்டதால உண்டான வரப்பிரசாதம் என்றார்.

ஒரு குளத்தில் நீர் நிறைந்திருந்தால் அந்தக் குளத்தைச் சூழவுள்ள ஊர்முழுதும் வளம்பெறும் என்று நாங்கள் சொல்லித்தான் நீங்கள் அறிய வேண்டியதில்லை. முன்னர்காலையிலும் மாலையிலும் ஆறுதலாகப் பட்டைமூலம் நீரிறைத்த நாம் இன்று பகலிரவாக இயந்திரங்கள் மூலம் கிணறு வற்ற வற்றத் தொடர்ந்து இறைக்கிறோம். இத

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)



சிறுவர் ஆண்டை முன்னிட்டு யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் தொழிலதிபர் சித்திரக் காட்சியைத் திறந்துவைத்துப் பார்வையிடுதல்

★ தீமையை அகற்றினல் இன்பத்தில் திளைக்கலாம் ★

உ
சிவமயம்






## திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்

திருப்பாதிரிப்புலியூர் - திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே.

திருச்சிற்றம்பலம்

இப் பூவுலகத்திலே தொழுவார்க்கு இரங்கியிருந் தருள் புரிகின்றவராகிய திருப்பாதிரிப் புலியூர்த் தீவண்ணரே, கங்கையாற்றைச் செஞ்சடையிலே வைத்தருளியவரே. அடியேன் மறுமையில் புழுவாகப் பிறந்தாலும் தேவரீரின் திருவடியை அடியேன் மனத்திலே வழுவாதிருக்க வரந் தந்தருளல் வேண்டும். ★




## பழைமை

நண்பரிடத்தில் பழைமை பாராட்டுதல்

அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

அன்புடன் பலநாட் பழகிய நட்பினையுடையவர் நண்பர் தமக்குக் கெடுதியானவற்றைச் செய்தாலும் அவர் பாலுள்ள அன்பு நீங்கப் பெறுர்.

**Longstanding Friendship**

They that have friendship based on affection-(they) never lose their affection even when wronged.

## 1979 யூன் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | வெள்ளி | — | ஆயிலியம் |
| 6. | புதன் | — | ஏகாதசி விரதம் |
| 8. | வெள்ளி | — | பிரதோஷ விரதம் |
| 10. | ஞாயிறு | — | பூரணை விரதம் |
| 11. | திங்கள் | — | திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் குருபூசைத் தினம் |
| 20. | புதன் | — | ஏகாதசி விரதம் |
| 21. | வியாழன் | — | கார்த்திகை விரதம் |
| 22. | வெள்ளி | — | பிரதோஷ விரதம் |
| 24. | ஞாயிறு | — | அமாவாசை விரதம் |
| 25. | திங்கள் | — | புதூர் நாகதம்பிரான் பொங்கல் |
| 29. | வெள்ளி | — | மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசைத் தினம் மாவிட்டபுரம் கொடியேற்றம் |

1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## மழைநீரும்........

ளுல் என்ன நடக்கப்போகிறது என்பதும் எல்லோருக்கும் தெரியும். கச்சேரி பத்திரம் என்று பைத்தியக்காரன் போலச் சொல்லுகிறோம்.

குளங்கள் வரண்டிருக்கும்போது அவற்றை ஆழமாக்கி விட்டால் அதிக நீர் தேங்கி நிற்கும். உங்களுக்கு வேண்டிய மண்வெட்டிகள் தாச்சிச்சட்டிகள் இரவலாக உதவுவோம். குளத்தைத் தோண்டி வளத்தைப் பெருக்குங்கள்.

## Sayings of Yogaswamikal

You must not be indifferent to work because your salary is poor.

We are all the same. Difference is only in degree.

If you lead a natural life without over stepping the limits, everything will come to you.

Thiruvasakam can be studied for the sake of concentration.

We have to laugh at the weakness of our mind and body.

Till you get perfect knowledge, try to remain like one who is blind, deaf, and dumb mounam.

Speak what comes from within. Otherwise don't speak.

Do not be in a hurry. Do not be agitated.

### உங்களுக்குத் தெரியுமா?——— விடைகள்

1. இந்தியா 2. பாலஸ்தீனம் 3. தாய்லாந்து 4. யப்பான் 5. அலஸ்கா 6. சீனம் 7. தீபத் 8. கனடா 9. பின்லாந்து 10. நியூசீலந்து 11. அவுஸ்திரேலியா 12. கொறியா 13. சுவிற்சலாந்து 14. எகிப்து 15. மதுரை. ★

★ உள்ளம் இறைவனுக்கானுல் துன்பங்கள் அணுகா ★

# குழந்தைக் கல்வி

இளம்பராயத்தில் குழந்தைகள் விளையாட்டுக்கள் மூலமும், இயற்கை வனப்பின் மூலமும், தங்களோடு ஒத்த குழந்தைகளோடும் பழகிப் பல விடயங்களை அறிந்து கொள்ளுகின்றனர். இப் பருவத்தில் அவர்கள் புல் பூண்டுகள், பாவைப்பிள்ளைகள், பறவைகள், நாய்க்குட்டிகள் பூனைக்குட்டிகள் மீது அதிக அன்பு செலுத்துகின்றனர். கன்றுக்குட்டி, ஆட்டுக்குட்டி போலத் தாமும் துள்ளி பாபா, பாப்பா என்று மழலைமொழி பேசுகின்றனர். இந்தப் பருவத்திலேயே பிராணிகளுக்குத் துன்பஞ் செய்யாமல் அவர்கள் ஒழுகுமாறு நாம் சாவதானமாகப் பழக்கிவிடுதல் வேண்டும். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கும் பொறுமையாக அவர்கள் விளங்கிக்கொள்ளும் வகையில் விடை பெறுதல் வேண்டும். அவர்கள் ஓயாது ஏன் அம்மா? ஏன் அப்பா? அது என்ன? ஏன் அப்படி? என்று கேட்பார்கள். அவர்கள் கேட்கும்போது எமக்கு வாய் உளையும் என்று நாம் தட்டிக்கழிக்கவோ மழுப்பிவிடவோ கூடாது. பொறுமையாக விடைகூறி அவர்கள் விருத்தியைக் கவனித்துக்கொள்ள வேண்டும். அவர்களின் ஆர்வம் மழுங்கினால் அவர்களின் மனம் பூரணவளர்ச்சி பெறாது.


குழந்தைகளுக்கு அம்மாதான் முதல் ஆசிரியை. அவர் பாடசாலைக்குப் போனபின்பும் அம்மா அவர்களைக் கவனித்துக் கொள்ளுதல் வேண்டும். பாலர் வகுப்புக்களுக்குப் பெண் ஆசிரியர்கள் தகுதியானவர்கள். ஆண்கள் கற்பிப்பதாயின் தாய்மையுள்ளத்தை அநுசரித்துப் படிப்பித்தல் வேண்டும். தாயொக்கும் அன்பில் தசரதன் அரசியலை நடத்தினான். இறைவனே எல்லா உயிர்களுக்கும் தாயாய் உள்ளான். எனவே ஆசிரியர் பாடசாலையில் தாயாய் மாறுவதில் எவ்வித சங்கடமும் இல்லை.

இயற்கை அழகையும் கலை அழகையும் குழந்தைகள் அநுபவித்தல் வேண்டும். கதைகள் மூலம் நல்லறிவைப் பெறுதல் வேண்டும். நல்ல மொழியை சொற்களை வசனங்களைப் பேசப்பழகுதல் வேண்டும். இதற்கு ஆசிரியப் பெரியார்கள் புத்திக்கூர்மையும் சீரிய நோக்கமும் பெரிதும் வேண்டப்படும். குழந்தைகளிடம் சகோதரபாவமும், பரோபகார சிந்தனையும் அமைதல் வேண்டும். நல்ல கருத்துக்களை அவர்கள் மனத்தில் வித்திடுவது வித்தியாசாலையின் பெருங்கடமையாகும். பகுத்தறிவில்லாத கோழி, தான் மேய்க்கும் ஒவ்வொரு குஞ்சையும் கவனிக்கிறது. படிப்பறிவில்லாத இடையன் தான் மேய்க்கும் ஒவ்வொரு ஆட்டையும் மாட்டையும் கவனிக்கிறான். பகுத்தறிவும் பயிற்சியும் பட்டமும் பண்பும் பெற்ற நாம் பணி செய்யத் தவறக்கூடாது.

பாலர் வகுப்புக்களைக் கடந்து பருவம் முற்றிப் பல பாடங்களையும் விடயங்களையும் விடுப்பூக்கத்தோடு விடாப்பிடியாகப் படிக்குமுனையும் பிள்ளைகளை வெகுவாக ஊக்கிவிடுதல் எமது பெருங்கடமையாகும். அவர்களுக்குப் பகுத்தறிவும் ஆராய்ச்சித்திறனும் இயற்கையாகஉண்டாகின்றன. இயற்கையாக உண்டாகின்றன என்பதை இறைவன் உபகரிக்கிறான் என்று கூறுவதே பொருத்தமாகும். இப் பருவத்தில் கண் காது கை இவற்றோடு அறிவையும் இசை வாக்கிக் கலைகள் கைத்தொழில்கள் என்பனவற்றையும் பழக்கிவிடலாம். இப் பருவத்தில் உண்மை, நேர்மை, விசுவாசம். நியாயம், நீதி, தெய்வநியதி இவற்றை அவர்கள் உணருமாறு வழி செய்துவிடுதல் நம் தலையாய கடமையாகும். இங்ஙனம் அவர்களின் பரிசுத்தமான மனத்தைப் பழக்கிவிட்டால் அவர்களிடம் இனவேறுபாடு, சாதி வேறுபாடு, சமயவேறுபாடு, மொழி வேறுபாடு முதலிய உணர்ச்சிகள் உண்டாகமாட்டா. மனவேற்றுமை, துவேச மனப்பான்மை உண்டாகாதவாறு பழக்கமுடியும். சுகர் என்பவர் வியாசபகவானின் மைந்தர். அவர் ஆண் பெண் என்ற வேறுபாடு தெரியாமலே உருவாகி வளர்ந்த மகான்.

— தொடரும்

## யோகாசனம்



[யோகாசனம் பழகுகின்றவர்கள் பலர் மில்க்வைற் தொழிலகத்தில் சவர்க்கார மேலுறைகளைக் கொடுத்தும் அனுப்பியும் யோகாசனப் படங்களையும், புத்தகத்தையும் பெறுகிறார்கள். அவர்களுடைய ஆர்வத்துக்கு எங்கள் பாராட்டு. ஆனால் ஒன்று கவனிக்கவும். யோகாப்பியாசம் வெறும் உடலப்பியாசம் அல்ல. அதைத் தகுந்த வழிகாட்டி ஒருவரை முன்னிட்டு அமைதியான சூழலில் செய்க. உணவு கொண்டபின் செய்தல் கெடுதியானது.]


### சலபாசனம்

குப்புறப்படுத்து உள்ளங்கைகளை மேல்நோக்கி மூடித் தொடைகளுக்கு அடியில் வைக்கவும். இந்நிலையில் ஒருவரைப் பார்க்கும்போது வெட்டுக்கிளியின் நினைவுவரும். கைகளைத் தரையில் அழுத்தியவாறு இடுப்புப் பகுதி இருக்கக் கால்களை விறைப்பாக்கி மெதுவாக மேலே ஒரு முழ உயரத்துக்கு உயர்த்துக. இந்நிலையில் சில நிமிடநேரமிருந்தபின் மெதுவாகக் கால்களை முன்னிருந்தவாறு சேர்த்து நீட்டுக.

மூச்சுப்பழக்கம் (வெகுகவனமாக) உயர்த்தும்போது உள்ளே இழுத்து, நிறுத்தி, காலை இறக்கும்போது மூச்சை வெளியே விடுக. இதை ஆறு ஏழு முறை செய்யலாம்.

இந்த அப்பியாசத்தால் பல நன்மைகள் உண்டு. இடுப்புவலி நீங்கும், தொந்தி கரையும். சமிபாட்டு உறுப்புக்கள் சுறுசுறுப்படையும். முதுகெலும்பின் அடிப்பாகம் வளையுந்தன்மை அடையும், நீரிழிவு முதலிய நோய்கள் குணமாகும். மண்ணீரல், சிறுநீர் உள்ளுறுப்புக்கள் உறுதி பெறும். கண்பார்வை சிறக்கும்.

★ கோபம் கொள்பவன் தன்னைப் பாழ்படுத்துகிறான் ★



முற்றொடர்:

## சூரிய நமஸ்காரம்

### நோய்நீக்கும் மருந்து

சூரியபகவான் நோய்களை நீக்கிப் பலவித நலன்களைத் தரும் கருணைவடிவினன் என்று வேதங்களும் உபநிடதங்களும் உரைக்கின்றன. இருதய நோயைக் குணப்படுத்தும் இயல்பினன் இரவி என்று இருக்குவேதம் இயம்புகின்றது.

சூரியகிரணங்கள் பட்டாலே நோய்கள் விலகி உடலுக்கு வலிமை உண்டாகும் என்று விஞ்ஞானிகள் கண்டுள்ளார்கள். முதுமை நீங்கி இளமை உண்டாகச் சூரிய ஒளி உதவுகின்றதென்பர்.

மயூரகவி என்பார் தாம் பாடிய சூரியசதகத்தில் "அருணதேவன் கண்நோய்களைத் தீர்த்து நல்ல கண் பார்வையை அளிக்கவல்லவன்" என்று போற்றியுள்ளார். அல்டஸ் ஹக்ஸ்லி என்னும் பெயர்பெற்ற விஞ்ஞானியும் அதேகருத்தைக் கூறியுள்ளார். ஐரோப்பியர் சூரியவொளி படும்வண்ணம் வெளியிற்கிடந்து உடல்நலம் பெறுவதும் இதனாலேயே.


மயூரகவி போஜராஜனின் அவைக்களத்துப் புலவர்களில் ஒருவர். அவர் தகாதவழியிற் காமங்கொண்டதனால் உண்டான சாபங் காரணமாகக் குஷ்டநோயினால் வருந்தினார். அந்நோயின் நீக்கத்துக்காகவே அவர் சூரியனை வழிபட்டுச் சூரிய சதகம் என்னும் நூறு சுலோகங்களை அருமையாகப் பாடினார் என்பர். இந் நூல் சொல்லழகும் கருத்தாழமும் உவமைச் சிறப்பும் உள்ள சிறுகாவியமாகும்.

சூரியனைப் புகழ்ந்து போற்றும் வேறொரு நூல் ஸாம்ப பஞ்சாசத்து என்பதாம். அதைக் கிருஷ்ணனுடைய மைந்தன் சாம்பன் என்பான் பாடியுள்ளான். சாம்பன் தனக்குற்ற நோயைத் தீர்ப்பதற்கு வழி சூரியபகவானே என்றறிந்து அவனைப்போற்றி வழிபட்டு ஐம்பது செய்யுள்கள் கொண்ட இந் நூலைப் பாடி ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் பெற்றான்.

— தொடரும்

ooo

## அனைத்துலகச் சிறுவர் ஆண்டில் பிள்ளைகளுக்குப் படிப்பார்வம் வேண்டும்.



### நூல்பல கல்

பள்ளியில் சென்று பாடம்
படிப்பது நன்று; மேலும்
தெள்ளிய அறிவு நூல்கள்
தேடியே கற்றல் வேண்டும்.

துறைதுறை யாக நூல்கள்
தொகுத்துள நூல கத்தில்
முறையொடு போய்ப் படித்தல்
முழுதும்நல் வழக்கமாகும்.

கதைகளில் விருப்ப மேனும்
கவிதையில் நாட்ட மேனும்
எதையெடுத் தாலும் நன்றே
என்னும்நூல் படித்தல் வேண்டும்.

— நாரா. நாச்சியப்பன்

## நொண்டிப் பொல்லு

கால்களை இழந்தவர்களும் காலூன்றி நடக்கமாட்டாதவர்களும் கமக்கட்டில் இடுக்கி ஊன்றி உலாவுவதற்கு உதவியான நொண்டிப் பொல்லுகள் கொடுத்து உதவ ஆயத்தமாய் இருக்கிறோம். தேவையானோர் எம்மிடம் வந்து தேவைக்கேற்ற விதமான — அளவான பொல்லுகள் — ஊன்றுந் தடிச்சட்டங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## மநுதர்மம்

சாப்பிட்டபிறகு ஸ்நானம் செய்யலாகாது. நோயுற்றபோது எண்ணெய்தேய்த்து முழுகக்கூடாது. காரணமின்றி நள்ளிரவில் ஸ்நானஞ் செய்யலாகாது. பழக்கமில்லாத குளங்களில் இறங்கி நீராடலாகாது. பெரியவர்களின் நிழலை மிதிக்கவும் தாண்டவுமாகாது. அந்திசந்தி நாற்சந்திகளில் சும்மா நிற்கலாகாது. மலம் மூத்திரம் கோழை, எச்சில்களை மிதிக்கக்கூடாது. பிறர் மனைவியைச் சேர்வதால் ஆயுள் குறையும். ★

★ தியானத்தின் மூலம் பேரின்பம் அடையலாம் ★

முற்றொடர் :

## சிறுவர் ஆண்டுச் சிந்தனை

உலகில் ஒவ்வொரு நிமிடமும் 200 பிள்ளைகள் பிறக்கின்றார்கள். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இக் கணக்கு எடுக்கப்பட்டது. எனினும் இவர்களுள் இளமையிலேயே பலர் இறந்துபோகிறார்கள். குழந்தைப் பராயத்து மரணத் தடுப்புக்காக உலகநாடுகள் வழிவகைகளைச் செய்து வருகின்றன.

### சுகாதார வசதிகள்

குழந்தைகளைப் பலியெடுக்கும் கொடிய நோய்களான க்ஷயம், தொண்டைக்கரப்பன், குக்கல், ஏர்ப்பு, போலியோ மைரிஸ், அம்மை என்பனவிலிருந்து பாதுகாப்பளிப்பதற்கு வழிசெய்கிறார்கள். இவ் வசதிகள் இலங்கையிலும் செய்யப் பெறுகின்றன.

### ஆசிரியர் பங்கு

கல்வித்திணைக்களமும் சௌக்கியப்பகுதியும் இதில் ஒத்துழைத்துக் கடமைபுரிகின்றன. காலந்தோறும் பிள்ளைகளை வைத்திய பரிசீலனை செய்து கவனமெடுப்பதாகத் திட்டமிட்டுள்ளார்கள்.

யூனிசெவ் (UNICEF) உதவியுடன் வசதிகுறைந்த 2500 பாடசாலைகளுக்கு வசதிவாய்ப்புச் செய்யவிருக்கிறார்கள். பதின்னான்கு வயதுவரை சட்டாயக் கல்வி கற்பிக்க வேண்டும் என்ற சட்டத்தையும் பலர் மீறித்தம்பிள்ளைகளை இளமையில் வேலைகளில் ஈடுபடுத்துகிறார்கள். இந்த நிலையை மாற்றுவதற்குக் கல்வித் திணைக்களம் நடபடிக்கை எடுக்க இருக்கிறது. இலங்கையில் 6,55,000 பிள்ளைகள் படிப்பதைப் புறக்கணித்துள்ளதாகக் கணித்துள்ளார்கள். இனிமேல் பன்னிரண்டு வயதுவரை குறைந்தது ஆரம்பக் கல்வியாவது கற்கவேண்டும் என்பதை வற்புறுத்துவார்கள்.

### சமூக நலன்கள்

பிள்ளைகளைப் பாதுகாப்பதோடு அவர்களுக்குச் சமூக நலன்களையுதவி அவர்களை மனிதராக்குவதற்குப் பலவித வாய்ப்புக்களைச் செய்வார்கள். பாதுகாப்பு, புனர்வாழ்வு, சமூக அபிவிருத்தி, ஓய்வுநேர உபயோகம், கலாசார நடபடிக்கைகள், தொழில் முன்னிலைப் பயிற்சி, ஆய்வுகள் பயிலல், பிரதேச அமைப்புக்கள் முதலிய துறைகளில் ஈடுபடுவார்கள். இன்னும் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு உபகரிப்பதற்காகவும் உள்ளூர் நிறுவனங்களும் வெளிநாட்டுத் தாபனங்களும் வெகுவாக உபகரிக்கும்.

(தொடரும்)

## ஊர்ப்பெயர் வரிசை

எமது பிரதேசத்தில் "கம்" கமம் என்னும் முடிபு பெற்றுள்ள ஊர்ப்பெயர்கள் பலவுள்ளன. மல்லாகம், சுன்னாகம், வீமன் காமம், பன்னாகம்' தம்பலகாமம் கொடிகாமம்.

முற்றொடர்:

## கண்டதும் கேட்டதும்

51. சமத்துவம் சகோதரத்துவம் என்று நாம் சிணுங்குவதெல்லாம் எம்மிலும் பெரியவரைப் பார்த்தேயன்றிச் சிறியவரைப் பார்த்தன்று.

52. வீட்டிற் கிடைக்கும் கஞ்சி வெளியில் கிடைக்கும் விருந்திலும் சிறந்தது.

53. உன்னைப் புகழ்பவனைப்பற்றி எச்சரிக்கையாய் இரு. அவன் உனக்கு வெறுங்கரண்டியால் ஊட்டுகிறான்.

54. அமைதியான பெண் வலிமையுள்ள ஆணையும் விவேகியான பெண் பைத்தியக்கார ஆணையும் மடக்குவாள்

55. கொடுத்துத் தொலையாத பொருள் அன்பு ஒன்றேதான். அது கொடுக்கக்கொடுக்க உன்னிடமே திரும்ப வந்துகொண்டிருக்கும்.

56. உனக்கு வேதனை தருபவர் தொழிலதிபர் அன்று. அவர் பணத்தைத் தொட்டுவிடுகிறார். உனக்கு வேதனம் தருவது நீ செய்த உற்பத்தியே.

57. இரவில் மிதமாக உண்பவர் நீண்டநாள் வாழ்வார்கள்

58. சொற்களை அறிந்து அளந்து அவதானமாகப் பேசுதல் வேண்டும்.

59. வீரரில்லாத தேசீய இனம் எதிர்காலமில்லாத மக்கட் கூட்டம்.

60. நம்பிக்கை என்பது இருளில் ஓர் ஒளி, அறிவு என்பது நாளின் வெளிச்சம், நியாயம் என்பது இரண்டுக்கும் இடையில் உள்ள பாதை. — தொடரும்

## பொற்றலைக் கையாந்தகரை

இதற்கு அல்குப்பை, அதிராம்பை, சாவதாரி முதலிய பெயர்களும் உண்டு. இது காயசித்தி மூலிகைகளுள் ஒன்று. நீரோட்டம் உள்ள இடங்களில் குத்துக்குத்தாக உண்டாகியும் படர்ந்தும் கிடக்கும். இது உடபுக்குப் பொன் வண்ணத்தைக் கொடுக்கும். இதில் இரத்தத்தில் கலக்கக் கூடிய அயச்சத்து உள்ளது. பாண்டு நோய்க்கு நல்ல மருந்து. காமாலை நோய்க்குக் கைகண்ட ஔடதம். இதனை நிழலில் உலர்த்திச் சூரணம் செய்து நெய்யும் தேனும் விட்டுண்ணலாம். இதைக்கொண்டு வைத்தியர்கள் நயன சுத்தித் தைலம் வடிப்பதால் இது கண்ணுக்கு நல்லது என்று தெரிகிறது. ★

**மில்க்வைற் செய்தி**


மில்க்வைற் செய்தி தேவையானோர் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள். நாங்கள் தபாற்செலவு கட்டிச் செய்தியை அனுப்புவோம்.

நீல சோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2,
பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் ,, 2,
சலவைப் பவுடர் மேலுறை 2.

மில்க்வைற் த.பெ.இல. 77, யாழ்ப்பாணம்.

★ சுயநலமுள்ளவன் துக்கத்தைத் தேடுவான் ★

முற்றொடர் :



## சோல்பரி கண்ட யாழ்நகர் சுவாமி

இந்துசமயத்தின் பல தெய்வங்களில், சிறு தெய்வங்களும் இடம்பெறுகின்றன. அவை நன்மை பயப்பனவாகவோ பழி சூழ்வனவாகவோ உள்ளன. அவை அண்டங்களின் பரப்பில் இயற்கையின் ஐம்பூதங்கள் முதலானவற்றின் அதி தெய்வங்களாகத் தொழில் செய்வனவாகும்.

இந்துசமயப் புராணத்துறையில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையில் நடைபெற்ற போர்களே அதிகமாகக் கூறப்படுகின்றன. அசுரர்கள் தாங்கள் இறைவனிடம் தவஞ்செய்து பெற்ற வரங்களின் பயனாகத் தேவலோகத்தைத் தாக்கித் தேவர்களை வென்று அவர்களைத் தங்கள் அடிமைகளாக்கினார்கள், பின்னர் தேவலோகத்தவர் இறைவனாகிய சிவபெருமானைச் சென்று சேவித்துத் தங்களுக்கு உதவி செய்தருளுமாறு வேண்டுவர். (இங்ஙனமே வைணவ புராணங்களும் விஷ்ணுவை இறைவனாகக்கொண்டு இவ் வரலாற்றைக் கூறுகின்றன.

யுத்தங்கள் இடைவிடாது நடைபெற்று வருவனவாகும். அவையும் இறைவன் திருவிளையாடல்களில் ஒரு பகுதியாகும். பிண்டத்தில் யுத்தங்கள் அறிவுக்கும் அறியாமைக்கும், ஒளிக்கும் இருளுக்கும் இடையில் நடைபெறும் ஆன்மீகப் போராட்டம் எனப்படும். இப் போரில் ஆன்ம தத்துவங்கள் எவையும், அவற்றுக்கு மேலாகவுள்ள தெய்விக அருளின் தலையீடின்றி வெற்றிபெறுதல் இயலாதாகும்.

அதுவும் ஆன்மாவானது தன்னாலோ தன் கருவிகரணங்களாலோ எதுவுஞ் செய்யமுடியாது என்று அகந்தையை முற்றாக விட்டாலொழிய அவ்வுதவி கிடைப்பதில்லை.

### வழிபாட்டுமையம்

இந்துசமயத்தில் வழிபாட்டு மையம் எங்கேனும் அமையலாம். முருகனைக் குவிமையமாகக் கொண்டால், அன்றி அவருடைய தன்மைகளிலொன்றைக் கொண்டால், அஃதாவது அவரின் இளமையும் அழகும் அருளும் விளங்கும் பாலமுருகனாகவோ, வீரமு ஆண்மையும் மிக்க விளங்கும் வேலனாகவோ கொள்ளலாம். அன்றி அவரின் திருக்கரத்திலுள்ள வேலையோ வணங்கலாம்.

சிலர் ஞானப்பழமாகிய கணேசனைத் தியானிப்பர். அன்றி விக்கினங்களை அகற்றும் விக்கினேஸ்வரனாக வழிபடுவர். இன்னும் சிலர் சக்தி என்னும் தேவியை நோக்கி வழிபட்டுத் தம் தேவைகளை நிறைவு செய்வர். தேவியை வழிபடுவோர் அவளின் பயங்கர உருவத்தைக் காளியென வணங்குவர். இன்னும் சிலர் சிவனை வணங்குவர். இவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்குக் காரணம் மேலானவரை எளிதில் அடையமுடியாதென்பதுவாகும். ஆனால் மேலே சொன்ன வெவ்வேறு அமைப்புக்கள் யாவும் ஒரே உண்மைப் பொருளையே குறிப்பனவாகும். (இவை வைணவ சம்பிரதாயத்திலும் அமைந்துள்ளன.)

இத்தகைய தெய்விகத் திருவுருவங்கள் எல்லாவற்றின் பல்வேறு உறுப்புக்கள் ஈறாகவுள்ள எல்லாவற்றுக்கும் பலவகையான விளக்கங்கள் கூறும் புராணப் பழங்கதைகள் உள்ளன. அன்றி ஒவ்வொரு தலத்திலும் எழுந்தருளியுள்ள கடவுளுக்கு அங்கே வழிபடு தெய்வமாக வந்தருளியமைக்குரிய கதைகளும் உள்ளன. இக்கதைகள் யாவும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளதால் வெளிநாட்டவர்களுக்கு இவை விளங்கமுடியாதனவாய்ச் சிக்கலுள்ளனவாய் இருக்கும்.

ஆனால் இந்துப் பாரம்பரியமான பண்பாட்டின் விளக்கமாகவே இவை அமைந்துள்ளனவாகும். எல்லாப் பாரம்பரியங்களிலும் புராணங்கள் பழங்கதைகள் மூலமாகவேதான் உண்மைகள் அடுத்த தலைமுறைகளுக்கு விட்டுச் செல்லப்படுகின்றன. அன்றி ஒருகாலத்திலிருந்து வேறு காலத்துக்கும் விட்டுச் செல்லப்படுகின்றன. எனவேதான் புராணக்கதைகள் மக்கள் உள்ளத்தில் தொட்டிற் பருவ முதல் பதிந்துள்ளன. அவை பின்னர் அநுபவ முதிர்ச்சியில் தத்துவங்களாகத் தொகுக்கப் பெறுகின்றன. ★

### எழுத்து வேறுபடும் வடமொழி சில

| | | |
|---|---|---|
| கந்தம் | — | கெந்தம் |
| கர்வம் | — | கெர்வம் |
| சநநீ | — | செநநீ |
| சகம் | — | செகம் |
| தசம் | — | தெசம் |
| தரிசனம் | — | தெரிசனம் |
| பலம் | — | பெலம் |
| பந்து | — | பெந்து |

### உபநிடதச் சிந்தனை

1. மனமுவந்து கொடு. தாராளமாகக் கொடு. அடக்கத்தோடு கொடு. அச்சத்தோடு கொடு. பாத்திரம் அறிந்து கொடு.


— தைத்திரீயோப நிஷதம்

2. ஆசைப்படுகிறவன் ஆசைப் பொருள்களை எண்ணி எண்ணி அவற்றை நிறைவேற்றுதற் பொருட்டு இங்குமங்கும் பிறக்கிறான். ஆனால் ஆத்மாவின் ஆசைகளைப் பூர்த்தி பண்ணினவனுக்கு, பரிபக்குவம் அடையப் பெற்றவனுக்கு இம்மையிலேயே ஆசைகள் நசிந்து போகின்றன.

— முண்டகோப நிஷதம்

நிர்வாகத்தின் அதிகாரம் மனிதனாற் பொறுக்கமுடியாத அளவுக்குத் தீதாகும்போது ஒரு மனிதன் தனது சுதந்திரத்தையேனும் தியாகஞ்செய்து அகிம்சையுடன் கூடிய எதிர்ப்பைச் சம்பாதிக்கிறான். — மகாத்மாகாந்தி

★ புலனடக்கம் இல்லாதவன் ஓட்டைக்குடத்துக்கு நிகர் ★



முற்றொடர்:

# பஞ்சதந்திரம்

கஷ்டமும் சங்கடமும் பேராபத்தும் நேர்கிற சமயங்களில் மேலோர் தைரியத்தைக் கைவிடமாட்டார்கள். சிறந்த விவேகமும் தைரியமும் காட்டி விபத்துக்களை விலக்குகிறார்கள்.

நடக்காததை நடந்ததாகவும், இல்லாததை உள்ளதாகவும் வாக்கு வல்லபத்தால் சொல்லிப் பரப்புவதால் பழிச்சொல் கிளம்பும் என்று எதிர்பார்ப்பது மடமை. வம்பர்களின் போக்கை உலகம் விரைவில் அறிந்துகொள்ளும். தர்மதேவதை வம்பர்களைத் தண்டிக்கத் தவறுவதில்லை

சூரியன் கிழக்கில் உதயமானதும் இருளும் பனியும் விரைவில் மறைந்துவிடுகின்றன. ஒளியும் உஷ்ணமும் பரவுகின்றன. அதேபோல் உண்மைக்குப் புறம்பாகப் பழிச்சொல் கூறுபவர்கள் நிலைத்து நிற்கமாட்டார்கள்.

சிங்கத்தின் கர்ச்சனையால் கொசுக்கள் மடிவதில்லை. பெரியவர்கள் சொல்வன சிறியவர்களின் செவியில் விழுவதில்லை.

நன்றாகத் திட்டமிட்ட சூழ்ச்சியும் ஒருநாளில் வெளிப்பட்டுவிடுகிறது.

நல்லதைச் செய்கிறவர்களைத் தேவர்களும் காப்பாற்றுவார்கள்.

உண்மை அன்போடு ஒருவன் நன்மை செய்தாலும் அவன்மேல் சிலர் வெறுப்புத்தான் கொள்ளுகின்றனர். சாதுரியமாக ஒருவன் தீமையே செய்தாலும் அவனோடு நேசம் பாராட்டுகின்றனர். மனிதரின் மனத்தின் ஆழத்தைக் காணமுடியாது.

நல்லவழியை விட்டுக் கெட்டவழியில் செல்கிறவன் காலக்கிரமத்தில் கஷ்டங்கள்பட்டு மனம் நொந்து போகிறான்.

காரியம் அறியாத மூடன், நல்லவழியில் நாட்டம் இல்லாதவன், புத்தி மழுங்கிப்போனவன் இவர்கள் எல்லோரும் நல்லோர் சொல்லும் வார்த்தையைக் கேட்பதில்லை.

உத்தியோகத்தர் வஞ்சனை செய்யக்கூடாது ஏனென்றால் அரசாங்கத்தின் கண்கள் உளவாளியைப்போல் அதைக் கண்டுபிடித்துவிடும்.

உபகதைகள் கட்டுக்கதைகள் இனிப்பதுபோல் உண்மைக் கதைகள் காதில் இனிப்பதில்லை. ★

முற்றொடர்:

# இலக்கியச் சொல் வரிசை

(அ. கு)

| | | | |
|---|---|---|---|
| 76. | ஆக்கம் | — | வளர்ச்சி |
| 77. | ஆக்கை | — | உடம்பு |
| 78. | ஆகமம் | — | முதல் நூல் |
| 79. | ஆகாரம் | — | உணவு |
| 80. | ஆகுலம் | — | வருத்தம் |
| 81. | ஆங்காரம் | — | அகங்காரம் |
| 82. | ஆசனம் | — | இருக்கை |
| 83. | ஆசாரம் | — | ஒழுக்கம் |
| 84. | ஆசான் | — | தலைவன் |
| 85. | ஆசி | — | வாழ்த்து |
| 86. | ஆசிரியன் | — | குரு |
| 87. | ஆசீர்வாதம் | — | ஆசிகூறல் |
| 88. | ஆசுசம் | — | அசுத்தி |
| 89. | ஆஞ்ஞை | — | கட்டளை |
| 90. | ஆட்சி | — | ஆளுதல் |
| 91. | ஆடகம் | — | பொன் |
| 92. | ஆடம்பரம் | — | செருக்கு |
| 93. | ஆண்மை | — | ஆளுந்தன்மை |
| 94. | ஆணம் | — | குழம்பு |
| 95. | ஆணை | — | கட்டளை |
| 96. | ஆத்தன் | — | உண்மை கூறுவோன் |
| 97. | ஆதரவு | — | விருப்பம் |
| 98. | ஆதிக்கம் | — | மேன்மை |
| 99. | ஆதிபத்தியம் | — | பிரபுத்துவம் |
| 100. | ஆதீனம் | — | மேம்பாட்டுக்குரியது |


— தொடரும்

# அம்பலவாண நாவலரும் பெரியபுராணமும்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அம்பலவாண நாவலர் ஆறுமுகநாவலரைப் பின்பற்றி நைட்டிகப் பிரமசாரியாய் வாழ்ந்து தமிழ்த்தொண்டும் சைவப்பணியும் செய்தவர். வேற்பிள்ளை, சிவப்பிரகாச பண்டிதர் முதலானோரிடம் முறையாகப் படித்த இவர் மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் மடத்தில் மந்திர காசாயம் பெற்றவர். வட்டுக்கோட்டைச் சைவாங்கிலக் கல்லூரியை நிறுவியதோடு நாவலரைப்போலப் பிரசங்கங்கள் செய்தும் வந்தார். இவரது பெருமையை அறிந்த செட்டி நாட்டார் இவரைத் திருநெல்வேலிக்கு அழைத்துச்சென்று பெரியபுராணப் பிரசங்கங்கள் செய்வித்தனர். இவர் தேவகோட்டையில் பெரியபுராணப் பிரசங்கங்கள் செய்தமைக்காகப் பன்னீராயிரம் ரூபா சன்மானஞ் செய்தனர். இவர் செய்த எண்ணிறந்த நூல்களுள் பெரியபுராண பர்டியம் என்பதும் ஒன்று. இது அச்சில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. ★

★ வெறுப்பைக் கொண்டு வெறுப்பை வெல்லமுடியாது ★

தொடர்ச்சி :



# சுவாமி விவேகானந்தரின் வருகை

## சுவாமிகளின் சுற்றுலா

(சுவாமிகள் கொழும்பிலிருந்து கண்டி, அநுரதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்குச் சென்று இராமேஸ்வரம் வழியாகத் தமிழ் நாட்டுக்குச் சென்றார். தமிழ் நாட்டில் இராமநாதபுர மன்னருடன் தங்கி, அங்கிருந்து சென்னை வழியாகக் கற்கத்தாவுக்கு மீண்டார்.)

சுவாமிகள் 19 - 1 - 1897 செவ்வாய்க்கிழமை காலை கொழும்பிலிருந்து பொன் அருணாசலம் அவர்களுடன் புறப்பட்டுப் புகையிரதமூலம் பிரயாணமாகிக் கண்டியை அடைந்தார். அங்கே அவருக்கு இராச மரியாதைகளுடன் வரவேற்புக் கிடைத்தது. அங்குள்ள சைவாபிமானிகள் அவரின் சேவையைப் பாராட்டிப் பத்திரம் படித்துக்கொடுத்து வணங்கி மகிழ்ந்தார்கள். சுவாமிகள் அவர்களை வாழ்த்தி அறிவுரை வழங்கினார்கள்.

## யாழ்ப்பாணத்தை நோக்கி

சுவாமிகள் கண்டியிலிருந்து மாத்தளைக்குச் சென்று தங்கியபின், அடுத்தநாள் 20-1-1897 புதன்கிழமை கோச் வண்டிமூலம் மலைநாட்டு வளம் பார்த்தவாறே யாழ்ப்பாணத்தை நோக்கிப் பிரயாணமானார். வழியில் கெக்கிராவையில் வண்டிச்சில்லு பழுதானதால் பிரயாணம் தடைப்படலாயிற்று. எனவே கிராமப் பகுதியிலிருந்து மாட்டு வண்டியொன்றை வாடகைக்கு அமர்த்திப் பண்டங்களை வண்டியிலிட்டுச் சுவாமிகளும் நண்பர்களும் கால் நடையாக நடந்தும், வேறு மாட்டுவண்டிகளை அமர்த்தியும் அநுரதபுரஞ் சென்றார்கள்.

அநுரதபுரத்தில் அரசமர நிழலிலமர்ந்த சுவாமிகள் மூவாயிரம் மக்களுக்குப் பேசியவை தமிழிலும் சிங்களத்திலும் மொழி பெயர்க்கப்பெற்றன. சுவாமிகள் வழிபாடு என்னும் பொருள்பற்றி விரிவாகப் பேசினார்கள். வேதங்களுக்கு ஏற்றங் கொடுத்துப் பேசிய சுவாமிகள் வெறும் வழிபாடு பயனற்றது என்றார். அதைக்கேட்ட புறமத மக்கள் கூக்குரலிட்டுத் தகரங்களிலடித்து ஓசையுண்டாக்கிக் கூட்டத்தைக் குழப்பினார்கள். சுவாமிகள் அங்குள்ள இந்துக்களை அமைதியாக இருக்குமாறு அன்புடன் பணித்து அமைதி நிலவச்செய்தார். பின்னர் அங்கிருந்து குதிரைக் கோச்மூலம் வவுனியாவை அடைந்தார்கள். வவுனியாவில் சுவாமிகளுக்குப் பெரிய வரவேற்புக் கிடைத்தது.

வவுனியாவிலிருந்து புறப்பட்ட சுவாமிகள் காட்டு மார்க்கமாக யாழ்ப்பாணத்தை அடைந்தார். அவர் 24-1-1897 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தை அடையும்போது, வழியில் ஏழுபேர் உப்பாற்றுப் பாலத்தருகில் அவரை வரவேற்பதற்கு எம்மவர் ஒழுங்கு செய்தனர். உப்பாற்றடியில் நூற்றுக்கணக்கானோர் திரண்டுவிட்டமை வரவேற்பாளருக்கு அதிர்ச்சியாயிருந்தது.

உரியவேளையில் உப்பாற்றுப் பாலத்தடிக்கு வண்டி வராதமையால் எம்மவர் சிலர் சாவகச்சேரிவரை சென்று வரவேற்கத் துணிந்தார்கள். சாவகச்சேரியில் மெயில் கோச் எனப்படும் குதிரைவண்டி வந்துசேர்ந்தது. சுவாமிகளும் அவர்தம் சீடர்களும் அதில் வந்திறங்கினார்கள்.

அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஊர்வலமாகச் சுவாமிகளை அழைத்துப்போவதற்குக் குதிரைவண்டிகள் ஆயத்தமாயின. சோடிக் குதிரைவண்டி முன்செல்ல அதனைத் தொடர்ந்துஇருபது வண்டிகள் நகரத்தைநோக்கிநகர்ந்தன.

அப்புக்காத்தர் நாகலிங்கம், கனகசபை, காசிப்பிள்ளை, கதிரவேலு, இன்னும் நகரத்தார் என்னும் செட்டிமார் சுவாமிகளை அழைத்துச் சென்றனர். காலை 11-30 அளவில் யாழ்ப்பாணத்தை அடைந்தவர்கள் புறக்ரர் பொன்னம்பலம் என்பாரின் மனையில் சுவாமிகள் தங்க வசதி செய்தனர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முன்றலில் பெரிய பந்தல் அமைத்துச் சுவாமிகளை வரவேற்றனர். நகரத்திலிருந்து இந்துக்கல்லூரி வரை வீதியெங்கும் மகரதோரணங்கள் மலர் மாலைகள், வாழை கமுகுகள் அலங்கரித்தன. குடா நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் சுவாமிகளை ஒருமுறை பார்த்துப்போக வந்துகூடினர். காங்கேசன்துறை வீதியெங்கும் சனநெருக்கமாகவே இருந்தது.

நகரத்திலிருந்து ஆரம்பித்த ஊர்வலம் மங்கலவாத்திய மொலிப்பப் பதினையாயிரம் மக்களைக்கொண்டதாயிருந்தது. வழியிலுள்ள மனைகள்தோறும் நிறைகுடம், மங்கல விளக்கு மலர் மாலைகள் சுவாமிகளை வாருங்கள் வாருங்கள் என்று வரவேற்றன. சுவாமிகள் வழியில் கதிரேசன் கோயிலையும், சிவன்கோயிலையும் வண்டியிலிருந்து இறங்கிச் சென்று வழிபட்டார். இரவு பத்துமணியளவில் விழாப்பந்தலை அடைந்த போது, அங்கே சனசமுத்திரமாயிருந்தது. வரவேற்புச் சபையின் சார்பில், முன்னாள் திருவாங்கூர் நீதியரசர் செல்லப்பாபிள்ளை சுவாமிகளை மேடைக்கு அழைத்துச் சென்றார்.

— தொடரும்

★ நாவடக்கம் உள்ளவன் சினத்தை வெல்லுவான் ★

## All About Education

# Thiruvalluvar's Concept of Study

Acquire throughly the knowledge that is worth acquiring; and after acquiring it live in accordance there with. What they call numbers and what they call letters. These two are considered eyes to souls that live. The learned are said to possess eyes; the unlettered have two sores on their faces. The nature of the learned is to cause delight in Companionship and regret in separation. In humility they learn, standing like the poor before the rich; base are they that acquire no learning. (in this manner) The more the sandy spring is dug up, more water wells up in it. The more men learn, more of knowledge do they gain. (To the man of learning) every country is his and so also every city; wherefore, then does a man cease to learn till his death?

Whatever is learnt by a man in one life stands (him) in good sted for seven lives. They that have learning are eager to learn again for they see the world enjoing what they themselves enjoy. The precious undecaying wealth of a man is his learning. All other riches are no wealth at all.

(M. R. R.)

## நாடகத்துறையில் ஒருவர்

தமிழகப் பேராசிரியர் பலர் அண்மையில் வந்து போனார்கள். அவர்களுள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் துணைப் பேராசிரியர் ஆறு. அழகப்பன் என்பாரும் ஒருவர். அவர் வட இலங்கையில் பல கல்லூரிகளிலும் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியிலும் சொற்பொழிவாற்றினார். தமது துறை நாடகம் என்றும், நாடக நூல்களையும் நடிகர்களையும் அவர் வெகுவாக நயந்தார். இலங்கையில் நாடகம் என்றதும் இன்று 91ஆம் வயதில் தமது வீட்டின் விருந்தையிலேயே நடித்துக்கொண்டு கிடக்கும் கலையரசு சொர்ணலிங்கம் ஐயா அவர்களையே எவரும் கருதுவது போலப் பேராசிரியரும் கருதி அவரைக் காணவேண்டும் என்று துடித்தார். பேராசிரியர் தமது கலாநிதிப் பட்டத்துக்காக எழுதிய பெரியநூலில் சொர்ணலிங்கத்தாருக்குப் பெரிய இடம் தந்துள்ளார். பேராசிரியரை மில்க்வைற் தொழிலதிபர் அழைத்துக்கொண்டு சென்று அறிமுகஞ் செய்ததும் ஓகோ என்று எழுந்து கைகளை விரித்து இறுகத்தழுவி அன்புரிமையோடு உரையாடிச் சிற்றுண்டி வழங்கினார். சொர்ணர் தாம் 1926 ஆம் ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக்காரர் முதலிற் பரப்புவதற்குப் பாடிய பாட்டை அட்சரசுத்தியோடு சாப்பிடலாம் சாப்பீடலாம் என்று பாடியதோடு சாப்பிட்டபின் உண்டாகும் ஏவறையையும் விட்டுத் தமக்கு இயல்பான சிரிப்பையும் செய்து கூடநின்றவர்களை மெய் சிலிர்க்க வைத்தார்.

பேராசிரியர் ஈழத்து இசை மரபினையும் அதனைப் பேணிக்காத்த குடும்பத்தாரையும் கண்டு உரையாடுவதிலும் ஈடுபாடு கொண்டவர். புத்துவாட்டி சோமு அவர்களைப் பற்றிச் சொன்னதும் தம்மை மறந்து கேட்டுக்கொண்டிருந்தார். ★



முற்றொடர்:

## ஔவையார் அருளிய கல்வி ஒழுக்கம்

51. நெடுங்கடலோடினும் நிலையே கல்வி.
கரையையடுத்த கடலில் ஓடிப்போனாலும் கல்வி நிலையேயாகும்.

52. நேராக் கல்வி நிலையாகாதே.
உண்மையாகக் கற்காத கல்வி நிலையாகமாட்டாது. (அதாவது மனம் உடன்பட்டுக் கல்லாத கல்வி என்றும் கொள்வர்.)

53. நைய வருகினும் நொய்ய நன்கறி.
மெலிய வருகினும் நீ இலேசாக நன்றாகக் கற்றுக் கொள்.

54. நொந்தறியாதவர் செந்தமிழ் கற்றோர்.
இயற்றமிழைக் கற்றவர்கள் வருந்தியறியாதவர்.

55. நோகாதுண்பவர் நுண்பொருள் அறிந்தோர்
நுட்பமான கருத்தை அறிந்தவர் வருத்தமுறாது வாழ்பவராவர்.

56. பலகலை கற்றவர் பகையைக் கைவிடு.
பல நூல்களைக் கற்றவர்களுடைய விரோதத்தை நீக்கிவிடு.

57. பாவலர் என்போர் பழுதறக் கற்றோர்.
பாக்களில் வல்லவர் என்று சொல்லப்படுபவர், குற்றந்தீரக் கற்றவராவர்.

58. பிழையறக் கற்றவர் பெரியவர்தாமே.
குற்றந்தீரக் கற்றவர் பெரியவராகும்.

59. பீடுஞ் செல்வமும் பெறத்தருங் கல்வி.
பெருமையும் பாக்கியமும் பெறும்படி தருவது கல்வியேயாம்.

60. புரையறக் கற்றவர் புவியாள்பவரே.
பூமியைப் பரிபாலனஞ் செய்வோர் குற்றந்தீரக் கற்றவராவர்.

★ மனச்சாட்சி என்பது பரமன் அருளாகும் ★

# குழந்தைகளைப் பாதுகாப்போம்

கொக் கொக் கொக் என்று குரல் கொடுத்தவண்ணம் தாய்க்கோழி குப்பையைக் கிண்டிக் கிளறிக்கொண்டு நின்றது. குஞ்சுகள் எல்லாமாகப் பதினைந்து. அவை தாயின் குரலுக்குச் செவி கொடுத்தவாறு தாய் அலகினாலே கொத்திக்காட்டிய கறையான்களையும் பூச்சிகளையும் தின்று கொண்டு திரிந்தன. தாங்கள் தாய்க்கோழியை விட்டுத் தூரத்துக்குப் போகவில்லை என்பதை அறிவிக்கும்வண்ணம் குஞ்சுகளும் கிளிக் கிளிக்கென்று சப்தமிட்டு நின்றன. பூவரசங்கிளையில் பெரிய அண்டங்காகம் தலையைச் சரித்துக் குஞ்சுகளைப் பார்த்துக்கொண்டு இருந்தது. தூரத்தில் பசியால் வருந்திய பூனையொன்று நான்கு கால்களையும் நிலத்திலே தோயவிட்டுக் கள்ளப்பார்வை பார்த்துக் கொண்டு கிடந்தது. மேலே பறைப்பிராந்து ஒன்று வட்டமிட்டுக்கொண்டு பறந்தது.

கோழி என்ன செய்யும் பாவம் பதினைந்து குஞ்சுகளுக்கும் உணவுண்ணப் பழக்கியவாறு கால் நகந்தேயக் குப்பையைக் கிறுவதும் மேலே பார்ப்பதும் கிர் என்று இரைவதுமாய் நின்றது. திடீரென நீண்டநேரம் கிர் கிர் என்று இரைந்தது. குஞ்சுகள் பதினைந்தும் தாயின் காலடியை மொய்த்தன. கோழி தன் சிறகுகளை அகலவிரித்துக் குஞ்சுகளை அடக்கி மறைத்து அரவணைப்புச் செய்து கொண்டு அதிக கோபத்தோடு இருந்தது. குஞ்சுகளின் அருமை அதற்குத்தெரியும்.

அது காகத்துக்கும் பூனைக்கும் கேட்கும்படி தங்கள் பாஷையில் ஏதோ சொன்னது. கோழி கூறியதைப் பூனை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தது. கோழி சொன்னது

''என் பிள்ளைகளை வளர்க்க எனக்குத்தெரியும். அவைகளை ஆளாக்கி இரைதேடப் பழக்கும்வரை நான் அவற்றைக் கைவிடமாட்டேன். தவ்வல்கள் அவயவம் முதிர முன் இரைதேடமாட்டா. இவற்றை ஏவி இரைதேடித் தின்னுவதற்கு நான் விரும்பவில்லை. இந்தக் குழந்தைக் குஞ்சுகள் என்னை நம்பியே முட்டையுள் இருந்து வெளியே வந்தன. நான் என்ன மனிதரைப்போல மூளையில்லாதவளோ பார் பச்சிளங் குழந்தைகளைச் சுருட்டுக்கட்ட அனுப்புகிறார்கள். கடைகளில் எடுபிடி வேலை செய்யவும், வீடுகளில் சட்டி பானை கழுவவும் அனுப்புகிறார்கள். அந்தச் சந்தியைப் பார். டொம் டொம் என்று கேட்கிறது. அங்கே பத்து வயது நிரம்பாத பிஞ்சுக்குழந்தைகள் மோட்டார் கார், லொறி மட்காட்டுகளில் சாணிப்பொருக்குச் சுரண்டுகிறார்கள். அங்கே பார். அவர்களின் அழுக்கடைந்த உடுப்பை. அவர்கள் காரின் பழுதாப்போன பாகங்களைத் துடைத்து எண்ணெய் பூசுகிறார்கள். காலை ஆறுமணி தொடக்கம் இரவு எட்டு மணிவரை உந்தப் பிள்ளைகள் உடம்பு தேயக் கஷ்டப்படுகிறார்கள். நான் என்னுடைய குஞ்சுகளை அங்காலே இங்காலே விடமாட்டேன். நான் பட்டினி கிடந்தாலும் என்னுடைய குஞ்சுகளைக் கொண்டு வேலை செய்விக்க மாட்டேன்.''

தாயன்பைக் கண்ட பூனை தன்வழியே போனது. அண்டங்காகம் தூரத்தில் தத்திக்கொண்டுபோன தவளையை நோக்கிப் பறந்தது. ★

## பற்களைப் பாதுகாத்தல்

நாங்கள் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கு வழிவகைகளைச் செய்யும்போது, பிள்ளைகள் தங்கள் பற்களைப் பாதுகாத்தல் வேண்டும். இக்கருத்தை நினைவிற்கொண்டு மில்க்வைற் தொழிலதிபர் பல் வைத்திய கலாநிதி இ. நித்தியானந்தன் அவர்களிடம் ஒரு சிறு நூல் எழுதும்படி கேட்டார். அவர் ''பல்லும் சொல்லும்'' என்னும் தலைப்பில் உரையாடல் அமைப்பில் எழுதித்தந்த நூல் விரைவில் வெளிவரும். மாணவர் உலகத்துக்கு இந்நூல் பெரிய வரப்பிரசாதமாகும். ★

## தமிழக அன்பர்கள்

சென்ற மாதம் எங்கள் பிரதேசத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு நூற்றுக்கணக்கான தமிழகத்து அன்பர்கள் வந்துபோனார்கள். அவர்கள் யாழ்ப்பாணத்தைப் பொறுத்த அளவில் தாங்கள் தங்கள் ஊரிலேயே உலாவுவதையே உணர்ந்ததாகக் கூறினார்கள். சாஸ்தாபதிப்பகத்தின் மூலம் தர்மலோக தரிசனம், சண்முகர்வரார், பராசக்திவடிவம், காணுபத்தியம், சாக்தம், சௌரம், வைஷ்ணவம், சைவம், கௌமாரம், மும்மணிநூல் முதலிய ஏராளமான நூல்களை வெளியிட்டுவரும் செந்தில் துறவியும் அவருக்கு நெருக்கமான உயர்திருவாள் இராமமூர்த்தி (I. C.S .) அவர்களும் வந்தார்கள். அவர்கள் மில்க்வைற் தொழிலகத்தை வாழ்த்தியபின் மாவைக்கந்தனாலயத்தில் திவ்வியம் பழுத்த விரிவுரைகள் ஆற்றினார்கள்.

பண்பாடு பண்பாடு என்றெல்லாம் பேசுகின்ற நாம் நம் வைதிகத்தைத் தவறவிட்டால் எம்பாடு என்னாகும் என்று நாகரிகத்தைப் பற்றி அருமையாகப் பேசினார்கள். இவர்கள் முருகன் தலம் முப்பது கண்டவர்கள், திருமால் திருப்பதிகள் கண்டவர்கள், கேரளம் கண்டவர்கள், ஐம்பெரும் விழாக்களுக்குமேற் கண்டவர்கள். எங்கள் ஈழ வளநாட்டையும் கண்டுபோனார்கள். எங்கள் நாட்டுக் கோயில்களைப்பற்றி ராமமூர்த்தி அவர்கள் எழுதுவார் என நம்புகிறோம்.

## நூலகம் திறந்துவைத்தல்

தெல்லிப்பழை கட்டுவன்புலம் வித்தியாலயத்தில் 30-5-79 புதன்கிழமை வட்டாரக் கல்வியதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் B. Sc. அவர்கள் மங்கலவிளக்கேற்றிவைத்தபின் தொழிலதிபர் பாடசாலைக்குப் புதிய நூலகத்தைத் திறந்துவைத்துப் பல பொத்தகங்களை உபகரித்தார். ★

★ நல்லறிவு மனச்சாந்தியை உண்டாக்கும் ★




# ஸ்ரீ ஸ்வாமி சிவானந்த சச்சிதானந்த சரஸ்வதி மாதாஜி அவர்கள்

திருவாட்டி கலியாணசுந்தரம்

சகல உயிர்களுக்கும் மங்களத்தைச் செய்யும் சங்கரர் பரம்பரையில் வந்தவரும், திருக்கோணமலை சிவானந்த தபோவன் ஸ்தாபகரும், தங்கம்மா நாகரத்தினம்பிள்ளை தம்பதிகளின் தவப்புதல்வியுமான ஸ்வாமி சிவானந்த சச்சிதானந்த சரஸ்வதி மாதா அவர்கள், உடற் கூட்டினின்றும் விடுதலை அடைந்து இன்று ஓராண்டு பூர்த்தியாகி விட்டது. சிவானந்த தபோவனத்தில் மாதாஜி அவர்களின் குருபூஜை கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றது. மாதாஜி அவர்களின் பூர்வாஸ்ரமப் பெயர் செல்வநாயகி 1907ம் ஆண்டு மாசி 8ம் தேதி திருக்கோணமலையில் புண்ணியம் பல செய்த செல்வக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து கலை பயின்று, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு முதலிய இடங்களில் ஆசிரியத் தொழில்புரிந்து வருகையில், இமயஜோதி ஸ்வாமி சிவானந்த குருமகராஸ் அவர்களிடமிருந்து ரிஷிகேஷம் வரும்படி அழைப்பு வந்தது. 1952ம் ஆண்டு குருதேவரின் அழைப்பை ஏற்று, ரிஷிகேஷம் சென்று ஆறு மாதங்கள் அங்கே தங்கி இருந்து, சந்நியாச தீட்சை பெற்று, ஸ்வாமி சச்சிதானந்த மாதாவாக, அனைவருக்கும் அருள் வழங்கும் அன்னையாக, இலங்கை வந்துசேர்ந்தார்கள். அநேக நூற்றாண்டு இடைவெளிக்குப் பின் விரஜா ஹோமம் செய்து பரமஹம்ச சன்னியாச தீட்சை பெற்ற முதற் பெண்மணி இவரேயாவர். குருதேவரின் திவ்விய ஜீவன சங்கத்தின் கிளையை 1952ம் ஆண்டு திருக்கோணமலையில் ஸ்தாபித்துத் தமது தவத்தைத் தொடங்கினார்கள். பிதுரார் ஜிதச்சொத்தும், அன்னையாரின் அபரா உழைப்பும் ஸ்தாபனத்தை வளர்க்க உதவியாயின. தமிழ் மூதாட்டியாரான ஔவைப் பிராட்டியாரை நினைவூட்டும் தோற்றம் மாதாஜியின் தோற்றம். மாதாஜி அவர்களை நினைக்கும் போது துர்க்காதேவியின் கரும் பெண்மை அழகு, கருணை பொழியும் கண்கள், ப்ரம்மதேஜஸ் பொலியும் வதனம், மகிழ்ச்சி தரும் புன்னகை, மங்களக்காவி, கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி. வீடும் வேண்டாவிறல், திமிர்ந்த ஞானச் செருக்கு இவையெல்லாம் சேர்ந்த மாண்புறு தவக்கோலமே நம் கண் முன் தோன்றும். கண்டவரைக் கைகூப்பி வணங்கச் செய்யும் கெம்பீரத் தோற்றம் மாதாஜி அவர்களின் தோற்றம். ''துறவிக்கு வேந்தன் துரும்பு'' என்ற எண்ணம் அவர்களின் நாடி நரம்பெல்லாம் வியாபகமாகியிருந்தது. அதர்மம் எந்தருபத்தில் தலை எடுத்தாலும் அதை எதிர்க்கத் தயங்காதவர். துறவின் தீரம் அவர்களின் எண்ணம். சொல், செயல் யாவற்றிலும் பிரதிபலித்தது. குருதேவராலேயே ''ஸ்வாமி சச்சிதானந்தா ஒரு விலைமதிப்பற்ற மாணிக்கம்'' என்று புகழப்பெற்றவர். தியாகமும் தொண்டும் உயிர் நாடியாயமைய, ஏழையோடு ஏழையாகி ஏழ்மையில் வாழ்ந்தவர். உலக வாழ்வினின்று ஒளித்தோடி ஒதுங்கித் தவம்புரியாது உலகத்தவருக்கு உபகாரம் செய்து, அவர்களின் ஏச்சுக்கும், பேச்சுக்கும் ஈடுகொடுத்து, வாழ்வதையே பெருந்தவமாகக் கொண்டவர். மாதாஜி ஓர் இணையற்ற தீர்க்கதரிசி. கொடுத்து மகிழ்ந்தவர். ''சாதலின் இன்னாதது இல்லை இனியவாம் ஈதல் இயையாக்கடை'' என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டவர். சிவானந்த தபோவனத்தை திவ்விய ஜீவன சங்கக் கொள்கைகளை நடைமுறையாக்கும் கருவியாக அமைத்து, அதைக் குருதேவருக்குக் கொடுக்கும் குருதட்சணையாக அர்ப்பணித்தார். சேவை, அன்பு, தியானம் கொடுத்தல் முதலியன வாழ்வின் ஒவ்வொரு விநாடியும் நடைமுறையாக்கப்படும் நிலைக்களன் ஆக அமைந்தது சிவானந்த தபோவனம்.

இங்கு சாதி, சமய, இன, மத வேறுபாடு எதுவும் இல்லை. மனிதாபிமான சேவையே இங்கு மேலோங்கி இருக்கின்றது. திருக்கோணமலையில் உப்புவெளியில் புகையிரத ஸ்தானத்திற்கு அண்மையில், 16 ஏக்கர் கொண்ட நிலப்பரப்பில், தென்னை, மா, அரசு, வேம்பு முதலிய நன் மரங்கள் வானுற ஓங்கி, வளம்பெற்றுத் திகழும் புண்ணிய ஸ்தலமான தபோவனம், ஆதரவு அற்ற குழந்தைகளுக்கும், உதவி நாடிநிற்கும் பெண்களுக்கும், முதியவர்களுக்கும் வறியவர்களுக்கும் வாழ்வளிக்கும் பணியில் முன்னணியில் நிற்கின்றது. இதனால் வாழ்வுபெற்றோர் பலர். கடந்த ஆண்டு வெள்ளிவிழாக் கண்ட பெருமையும் இத் தாபனத்துக்குண்டு. இங்குள்ளவர்கள், காலை நான்கு மணிக்கெழுந்து காலைக்கடன் முடிந்ததும், மந்திர ஜெபம், தேவார திருவாசக பாராயணம் செய்வதிற் தவறுவதில்லை. இங்குள்ள குழந்தைகள் பேசக் கற்றுக்கொள்ளு முன்பே. மந்திர ஜெபம் செய்யக் கற்றுக்கொள்கின்றனர். மந்திர யோகத்தை விஞ்ஞானரீதியாக விளக்குவது மாதாஜி அவர்களுக்குக் கைவந்த கலையாகும். நோய் தீர, வறுமை தீர, செல்வம் கொழிக்க, ஆபத்து நீங்கவேண்டிய வேண்டியாங்கு எய்த மந்திர ஜெபம் உதவும் என்பதை மாதாஜி அவர்கள் பலரது அனுபவமாக ஆக்கியுள்ளார்கள். அதேபோல ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் முதலியோரது பாடல்களையும் பரிசோதித்துக் காட்டியுள்ளார்கள். தபோவனத்தை நடத்தப் பண முடை தடங்கலாக வந்தபோதெல்லாம் ''வாசிதீரவே காசு நல்குவீர்'' என்ற ஞானசம்பந்தப் பெருமானின் திருப்பதிகத்தைப் பாடுங்கள் என்று தமது தபோவனக் குழந்தைகட்குக் கூறுவதுண்டு. அதன்படி அவர்கள் பாடிக் காசுபெற்ற கதை அநந்தம். ''மந்திரமும், தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்'' என்ற அப்பர் வாக்கை அப்பட்டமாக நடைமுறையில் அநேக அன்பர்களுக்கு மெய்ப்பித்தவர்.

— தொடரும்

★ சான்றோரை எச்செயலும் துன்புறுத்தாது ★

## ஏழாலையில் திருக்குறள் மனனப்போட்டி

ஏழாலை இலந்தைகட்டி ஸ்ரீ பாதாள ஞானவைரவர் கோயில் இந்து சமய மாணவர் மன்றம் நடத்திய திருக்குறள் மனனப் போட்டியில் வெற்றியீட்டிய குழந்தைகளுக்கு மில்க்வைற் தொழிலதிபர் பரிசு நூல்களும் பணமும் கொடுத்து வாழ்த்தினர். அவ்வமையம் திருவாளர்கள்: சிவ. மகாலிங்கம் (ஆசிரியர் உரும்பராய் இந்துக் கல்லூரி) நாவேந்தன் (அதிபர், ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்) ஆகியோர் உரையாற்றினர்கள். ★

## அருள் விருந்து

ஆதாரம்: தர்மசக்கரம்

அமைதி வேண்டுகில் அவாவை விடவேண்டும்.
சிந்தை, சொல், செயல் ஒன்றுபடவேண்டியவை.
ஆசை இருக்கும்வரையில் அல்லலும் இருக்கும்.
எண்ணத்தைக் காப்பது மேலான விரதம்.
கொடை ஒன்றே மனிதனை மேம்படுத்துகிறது.
நல்லதும் அழகியதும் கடவுள் தந்தவை.
துன்பத்தை இன்பமாக்க வல்லவன் யோகி.
நல்லவன் செய்யும் நலன் எங்கும் பரவும்.
பற்று, பயம், சினம் அற்றமனம் சிரியமனம்.
முகமலர்ச்சி ஒற்றுமையை வளர்க்கிறது.
வெறுப்பு வேற்றுமையை வளர்க்கிறது.

## உங்களுக்குத் தெரியுமா?

### பின்வரும் பெயர்கள் எந்த எந்த நாடுகளைக் குறிப்பன?

1. பாரதநாடு 2. பரிசுத்தநாடு 3. வெள்ளையானை நாடு 4. சூரியோதய நாடு 5. பாம்பில்லாத நாடு 6. காதே நாடு 7. லாமா நாடு 8. மேப்பிள் நாடு 9. ஆயிரம் ஏரி நாடு 10. தேள் இல்லாத நாடு 11. கம்பளிநாடு 12. சந்நியாசி அரசு 13. ஐரோப்பரின் விளையாட்டுக் களரி 14. நைல்நதியின் நன்கொடை 15. தமிழ்நாடு

ஒருவருடைய பெருந்தன்மை அவருடைய இருதயத்திலன்றிப் புத்தியாகிய விவேகத்திலல்ல.

— மகாத்மா காந்தி


## நீலசோப்பும் நீங்களும் ஐம்பது ஆண்டு அநுபவம்

மில்க்வைற் நீலசோப் நாடு முழுவதும் நல்ல பெயர் பெற்றது.

இலங்கையில் நீலம் கலந்த சவர்க்காரத்தை முதன்முதலாகத் தயாரித்தவர்

**மில்க்வைற் தொழிலகத்தார்**

இன்று மதிப்புவாய்ந்த நீல சோப்பின் சாயலில் வேறு சோப்புக்களும் வீதியில் உலாவுகின்றன.

தரமான மில்க்வைற் நீலசோப்பின் மேலுறைகளைக் கவனித்து வாங்குங்கள்.

★ மேலுறைகள் பெறுமதியானவை. ★

அவற்றைச் சேர்த்துப் பெறுமதி வாய்ந்த பரிசுப் பொருட்களை எம்மிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.




### மில்க்வைற் நீலசோப்

இரண்டுவித சேவைகளைச் செய்கிறது.

★ அழுக்கினை விரைவில் நீக்குகிறது.

★ நீலம் போடும் சிரமத்தை அறவே நீக்குகிறது.

தூய வெண்மைதரும் மில்க்வைற் நீலசோப் எங்கள் தயாரிப்பு.

## மில்க்வைற் தொழிலகம்

ஸ்தாபிதம்: **1927**


## லண்டனில் சமய குரவர்களின் குருபூசை

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் என்று பெரியவர்கள் தீர்க்கதரிசனமாகப் பாடினார்கள். லண்டனில் சைவமுன்னேற்றச் சங்கத்தார் சிவமணிகமழும் வகையில் வழமைபோல் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசைகளை இம்மாதம் முறையாகக் கொண்டாடுகிறார்கள்.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள். கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1-6-79.